பக்கங்கள்: 07
# காலைக்கதிர்
Kālaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 03 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 11 சனிக்கிழமை 25.06.2022 கதிர் 123

## கடன்அட்டைகளுக்கான வட்டி விகிதமும் உயர்வு
### - மத்திய வங்கி அறிக்கை



இலங்கையில் கடன் அட்டைகளுக்குக்கான (கிரடிட் கார்ட்) வட்டி விகி தத்தை வர்த்தக வங்கிகள் உயர்த்தியுள்ளமை மத்திய வங்கியின் அறிக்கையில் தெரிய வந்துள்ளது.

2



## எரிபொருள் பதுக்கல்: 675 பேர் சிக்கினார்கள்

நாட்டில் எரிபொருளைப் சட்டவிரோதமாகப் பதுக்கி வைத்திருந்த 675 பேர் இதுவரை கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருளைப் பதுக்கி வைத்துள்ளவர்களைக் கைதுசெய்ய, நாடு தழுவிய ரீதியில் இதுவரை

2

# திருச்சி முகாமில் தற்கொலை செய்ய முயன்ற 30 இலங்கைத் தமிழர்கள் வைத்தியசாலையில்
## தீக்குளித்த ஒருவர் ஆபத்தான நிலையில்



தமிழகம் திருச்சி மத்திய சிறை வளாகத்தில் உள்ள அகதிகளுக்கான சிறப்பு முகாமில், தமது உயிரை மாய்த்துக்கொள்ள முயன்ற 30 இலங்கைத் தமிழர்கள், வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

திருச்சியில் உள்ள அகதிகளுக்கான சிறப்பு முகாமில், வெளிநாடுகளைச் சேர்ந்த குற்ற வழக்குகளில் தொடர்புடையவர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

அந்த முகாமில் இலங்கை, பங்களாதேஷ், சூடான், நைஜீரியா உட்பட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த 150 இற்கும்

2

### பனை அபிவிருத்திச் சபைத் தலைவரின் பேரினவாத எதேச்சதிகாரம்



# தென்னிலங்கை நிறுவனத்துக்கு திக்கம் வடிசாலை தாரை வார்ப்பு
## எதிர்த்துப் போராட அணிதிரளுமாறு ஐங்கரநேசன் அழைப்பு

திக்கம் வடிசாலையின் உரிமத்தைத் தங்களிடம் மீளவும் கையளிக்குமாறு அதை நிர்வகித்து வரும் வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகக் கோரி வருகின்றனர்.

2


# அமெரிக்க ஜனாதிபதியுடன் இலங்கைத் தூதுவர் பேச்சு
### பொருளாதாரத்தை மீட்டெடுப்பது தொடர்பில்



அமெரிக்காவுக்கான இலங்கைஹ தூதுவர் மஹிந்த சமரசிங்க, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை நேரில் சந்தித்துப் பேச்சு நடத் தியுள்ளார்.

வெள்ளை மாளிகையில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில், இலங்கையின் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு, அமெரிக்காவால் வழங்கப்படக்கூடிய பங்களிப்பு தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

## 10 அத்தியாவசியப் பொருள்களை இறக்குமதிசெய்வதற்கு அனுமதி



அரிசி, சீனி, பருப்பு, பால்மா உட்பட 10 அத்தியாவசியப் பொருள் களைத் திறந்த கணக்குகள் மூலம் எதிர்வரும் மாதம் முதலாம் திகதி முதல் இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வர்த்தகத்துறை அமைச்சு இதனைத் தெரிவித்துள்ளது.


# 200 அத்தியாவசிய மருந்துகளுக்கு இலங்கையில் பெரும் தட்டுப்பாடு!
### உதவி வழங்குமாறு உறுப்பு நாடுகளிடம் ஐ.நா. கோரிக்கை



இலங்கையில் தற்போது, சுமார் 200 அத்தியாவசிய மருந்துகளுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது. அத்துடன், எதிர்வரும் 2 அல்லது 3 மாத காலப்பகுதியில் மேலும் 163 வகையான மருந் துகளுக்குப் பற்றாக்குறை ஏற்படலாம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

2

### மண்ணெண்ணெய் விநியோகத்தில் இழுத்தடிப்பு
## ஹட்டனில் வீதி மறியல் போக்குவரத்து முடக்கம்



ஹட்டன் பகுதிக்கான மண்ணெண்ணெய் விநியோகத்தில் இழுத்தடிப்பு தொடர்வதால் ஆத்திர மடைந்த மக்கள், இன்று வீதிக்கு இறங்கி சாலை மறியல் போராட்டத்தை முன்னெடுத்ததால் போக்குவரத்து

2

# எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வரிசையில் நின்றவர்கள் மோதல்
### கத்திவெட்டுக்கு இலக்காகி நால்வர் படுகாயம்



எரிபொருள் நிரப்பு நிலையத்தில் வாகனங்களுடன் வரிசையில் நின்றவர்க ளுக்கிடையில் இடம்பெற்ற மோதலில் 4 பேர் படுகாயமடைந் துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச்சம்பவம்வெல்லவாய எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு முன்பாக

2

## யாழ். ஊடகத்துறைத் தலைவர் பேராசிரியராகப் பதவி உயர்வு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி.ரகுராம் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். இதற்கான ஒப்புதலைப் பல்கலைக்கழகப் பேரவை இன்று வழங்கியது.

பல்கலைக்கழகப்பேரவையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை, துணைவேந்தர்

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு


## 200 அத்தியாவசிய ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

.இந்தநிலையில், இலங்கை அரசின் வேண்டு கோளுக்கு இணங்க 47.2 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான மனிதாபிமான உதவிகளை வழங்குமாறு ஐக்கிய நாடுகள் சபை உறுப்புநாடுகளைக் கோரியுள்ளது.

## கடன் அட்டை ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படி வர்த்தக வங்கிகள் சில தமது கிரெடிட் கார்ட்டுக்கான வட்டியை 30 சதவீதமாக அறிவித்துள்ளன.

இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை கடந்த ஏப்ரல் 8 ஆம் திகதி, கடன் அட்டைகள் மீதான அதிகபட்ச வட்டி வீத வரம்புகளை நீக்குவதாக அறிவித்ததை அடுத்து, கிரெடிட் கார்ட் வட்டி 18 வீதத்திலிருந்து 24 வீதமாக உயர்ந்தது. இந்நிலையில், தற்போது வட்டி 30 வீதமாக உயர்வடைந்துள்ளது.

அதேபோல் இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களில், நாட்டில் செயற்பாட்டில் உள்ள கடன் அட்டைகளின் எண்ணிக்கை1 லட்சத்து 46 ஆயிரத்து 286 ஆக உள்ளது எனவும் மத்திய வங்கி தெரி வித்துள்ளது.

## திருச்சி முகாமில்.......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேற்பட்டோர் உள்ளனர். முகாமில் உள்ள இலங்கைத் தமிழர்கள் தங்களை விடுதலை செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை வலியுறுத்தி கடந்த மாதம் 20ஆம் திகதி முதல் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தங்களது கோரிக்கைகளைத் தமிழக அரசுக்கு உணர்த்தும் விதமாக உண்ணாவிரதப்போராட்டம், தீப்பந்தப் போராட்டம், பாடைகட்டிப் போராட்டம்எனப்பல்வேறுவகையான போராட்டங்களை நடத்தினர்.

ஆனால், போராடி வரும் இலங்கைத் தமிழர்களின் கோரிக்கைகளுக்கு, திருச்சி மாவட்ட அதிகாரிகளும், தமிழக அரசும் இதுவரை செவிசாய்க்கவில்லை. இதனால் விரக்தியடைந்த நிருபன், நிரந்தன், ராஜன், கயன் ஆகிய 4 பேர் நேற்று மரத்தின் மீது ஏறி குதிக்கப் போவதாக தற்கொலைப் போராட்டம் நடத்தினர்.

இந்தநிலையில், சிறப்பு முகாமில் உள்ள 30 இலங்கைத் தமிழர்கள் நேற்று மாத்திரை உட்கொண்டு தற்கொலை முயற்சியில் ஈடுபட்டனர்.

இதையடுத்து, குறித்த 30 பேரும் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் யாரும் எதிர்பாராத விதமாக, உமா ரமணன் (வயது 44) என்பவர் தனக்குத்தானே மண்ணெண்ணெய் ஊற்றி தற்கொலைக்கு முயன்றார். உடல் எரிந்த நிலையில் மீட்கப்பட்ட அவர் திருச்சி மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

உயிருக்கு ஆபத்தான நிலையில் உமா ரமணன் சிகிச்சை பெற்று வருகின்றார்.

விடுதலை வேண்டி, இலங்கைத் தமிழர்கள் 30 பேர் தற்கொலைக்கு முயன்ற சம்பவம் தமிழகத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

## எரிபொருள்......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றிரவு இடம்பெற்றுள்ளது. கத்தி வெட்டுக் காயங்களுக்கு இலக்கான நால்வரே வெல்லவாய ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அவர்களில் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மொனராகலை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

தாக்குதல் நடத்திய நபர் தப்பிச் சென்றுள்ள நிலையில், வெல்லவாய பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## எரிபொருள்........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

670 சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதன்போது 21 ஆயிரத்து 600 லீற்றர் பெற்றோலும், 33 ஆயிரத்து 400 லீற்றர் டீசலும், 11 ஆயிரத்து 100 லீற்றர் மண்ணெண்ணெய்யும் மீட்கப்பட்டுள்ளன.

கைதானவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டார்.

## ஹட்டனில் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிலமணிநேரம்முற்றாகமுடங்கியது. பதற்ற நிலையும் உருவானது. பாதுகாப்பையும் பலப்படுத்த வேண்டிய நிலையும் ஏற்பட்டது.

ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியை மறித்து மக்கள் போராட்டத்தில் குதித்ததால் பொதுப்போக்குவரத்து ஊடாக வெளியிடங்களுக்குச் செல்வதற்குத் தயாரானவர்களுக்கும் தாமதம் ஏற்பட்டது.

ஹட்டன், பிள்ளையார் கோவில் சந்தியில் உள்ள 'சிபெட்கோ' எரிபொருள் நிரப்பு நிலையத்துக்குக் கடந்த சில நாட்களாக மண்ணெண்ணெய் வரவில்லை. மக்கள் வரிசைகளில் காத்திருந்து பெரும் ஏமாற்றத்துடனேயே வீடு திரும்பினர்.

எனினும், இன்று மண் ணெண்ணெய் விநியோகிக்கப்படும் எனக் கூறப்பட்டிருந்தது.

இதனால் மக்களும் நீண்ட வரிசையில் நின்றனர். எனினும், மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படவில்லை. தமக்கு இன்னும் மண்ணெண்ணெய் கிடைக்கவில்லை என நிர்வாக தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆத்திரமடைந்த மக்கள், தமக்கு உடனடியாக மண்ணெண்ணெய் விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு வலியுறுத்தியும், தாமதத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் ஹட்டன் - கொழும்பு பிரதான வீதியை மறித்துப் போராட்டத்தில் குதித்தனர்.

இதனால் ஹட்டன் - கொழும்பு, ஹட்டன் - நுவரெலியா, ஹட்டன் - கண்டி உள்ளிட்ட பிரதான நகரங்களுக்கான போக்குவரத்துச் சேவை சில மணிநேரம் ஸ்தம்பிதமடைந்தது. பொலிஸாரும் குவிக்கப்பட்டனர்.

மக்களை வதைக்கும் ஜனாதிபதி பதவி விலக வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோஷம் எழுப்பினர்.

பின்னர் பொலிஸாரின் தலையீட்டுடன் நிலைமை கட்டுக்குள் கொண்டு வரப்பட்டது. எதிர்வரும் திங்கட் கிழமை மண்ணெண்ணெய் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஹட்டன் பொலிஸ் நிலைய அத்தியட்சகரால் உறுதியளிக்கப்பட்டது.

போக்குவரத்தும் இயல்பு நிலைக்குக் கொண்டு வரப்பட்டது. போராட்டக்காரர்களும் கலைந்து சென்றனர்.

## யாழ்.ஊடகத்துறை......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா தலைமையில் நடைபெற்றது. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுச் சுற்றறிக்கை நியமங்களுக்குஅமையதிறமைஅடிப்படையில் பேராசிரியர் பதவி உயர்வுக்காக விண்ணப்பித்த கலாநிதி சி. ரகுராமின் விண்ணப்பத்தை மதிப்பீடு செய்த, மூதவையால் விதந்துரைக்கப்பட்ட துறைசார் நிபுணர்களின் மதிப்பீட்டு அறிக்கை, நேர்முகத் தேர்வு முடிவுகள் ஆகியன இன்றைய பேரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டன.

அவற்றின் அடிப்படையில், ஊடகக் கற்கைகள் துறைத் தலைவரும் கலைப்பீடத்தின் சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி சி. ரகுராம் ஊடகக் கற்கைகளில் பேராசிரியராகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்.

## தென்னிலங்கை ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பல போராட்டங்களையும் முன்னெடுத்துள்ளனர். ஆனால், இப்போது இவர்களைப் புறந்தள்ளி, இவர்களுக்கே தெரியாமல் பனைஅபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜ திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கையைச் சேர்ந்த வி.ஏ டிஸ்ரிலறிஸ் என்ற நிறுவனத்துக்கு 25 வருடக் குத்தகைக்குத் தாரை வார்த்துள்ளார். அவர் பேரினவாத எதேச்சாதிகாரப் போக்குடன் வடமராட்சி பனைத் தொழிலாளர்களின் வாழ்வுரிமையைத் தட்டிப்பறித்து தனது இனத்தவர்களிடம் கையளித்துள்ளார்.

- இவ்வாறு தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது கடுமையான கண்டனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

திக்கம் வடிசாலை தொடர்பாக இன்று பொ. ஐங்கரநேசன் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் அலுவலகத்தில் நிகழ்த்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

பனை தமிழ் மக்களின் இயற்கை வளங்களில் முதன்மையானது. இதிலிருந்து பொருளாதார ரீதியாக அதியுச்சப் பயனை அறுவடை செய்யவேண்டும் என்ற நோக்குடனேயே பனை அபிவிருத்திச் சபை தாபிக்கப்பட்டது. ஆனால், இதன் தலைவர்களாக நியமிக்கப்பட்டவர்களில்ஒருசிலரைத்தவிரஏனையோர் பனை பற்றிய பட்டறிவையோ, படிப்பறிவையோ கொண்டிராமல் அரசியற் சிபார்சை மட்டுமே தகுதியாகக் கொண்டிருந்தார்கள். ஆளுங்கட்சியில் அல்லது அதற்கு முண்டு கொடுக்கும் தமிழ்க்கட்சிகளில் இருந்து தேர்தலில் தோற்றுப்போனவர்களுக்குப் பிரதியுபகாரமாகத் தலைவர் பதவி வழங்கப்பட்டது. இவர்களால் பனைத் தொழில் சீரழிந்து இறங்கு முகமே கண்டது.

இப்போதைய தலைவர் கிரிசாந்த பத்திராஜவும் அதையே கனக்கச்சிதமாகச் செய்து கொண்டிருக்கிறார்.

திக்கம் வடிசாலை 1983 ஆம் ஆண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலும் பனை, தென்னைவள அபிவிருத்திக்கூட்டுறவுச் சங்கங்களின் நிதியிலும் உருவாக்கப்பட்டது. சுயாதீனமாக இலாபத்தோடு இயங்கிவந்த இந்த வடிசாலை 1987இல் வடமராட்சியில் இடம்பெற்ற ஒப்பரேசன் லிபரேசன் இராணுவத் தாக்குதல் காரணமாகப் பலத்த சேதமடைந்தது. இதனால், பனைஅபிவிருத்திச்சபையிடம் இருந்து உதவிபெற நேரிட்டது. ஆனால், ஒட்டகத்துக்கு இடம்கொடுத்த கதையாகப் பனைத் தொழிலாளர்களின் கடுமையான எதிர்ப்பையும் மீறி 2001ஆம் ஆண்டு அமைச்சரவைப் பத்திரத்தின் மூலம் திக்கம் வடிசாலை பனை அபிவிருத்திச் சபையின் கீழ் கொண்டுவரப்பட்டது. அப்போதிருந்தே திக்கம் வடிசாலையின் சுயாதீனம் பறிபோனது.

பனை அபிவிருத்திச் சபையின் தலைவர்கள் அரசியல் நியமனம் என்பதால் அவர்களின் கீழ் இருந்துவந்த திக்கம் வடிசாலையின் வளங்களும் அரசியல் தேவைகளுக்கே பயன்படுத்த நிர்ப்பந்திக்கப்பட்டது.

இதனாலேயே, திக்கம்வடிசாலையை பனை அபிவிருத்திச் சபையிடமிருந்து விடுவிக்க வடமராட்சி பனைசார் உற்பத்தித் தொழிலாளர்கள் நீண்டகாலமாகப் போராடி வருகின்றனர். பனை தமிழர்களின் தேசிய வளம் என்பதால் இது ஒட்டுமொத்தத் தமிழர் களின் பிரச்சினையும் ஆகும். திக்கம் வடிசாலையைத் தென்னிலங்கை முதலாளிகளிடமிருந்து மீட்கவும் பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் கிரிசாந்த பத்திராஜவின் பேரினவாத எதேச்சாதிகாரத்தைக் கண்டிக்கவும் பனைசார் உற்பத்தித் தொழிலாளர்களின் பின்னால் தமிழர்களாக நாம் அனைவரும் அணிதிரண்டு போராடுவோம் -என்றார்.



நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## எரியும் பிரச்சினை

எரிபொருள் விநியோக நெருக்கடி சமூகத்தில் – நாட்டில் பெரும் களேபரங்கள் – குளறுபடிகளுக்கு வழி செய்யப் போகின்றது.

நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பது கண்கூடு. அரசோ அரசுத் தலைவர்களோ பிரச்சினையைக் கையாள வக்கற்ற நிலையில், வாளாவிருக்கின்றனர். ஒவ்வொரு எரிபொருள் நிலையத்துக்கும் இரண்டு பொலிஸ்காரர்கள், இரண்டு இராணுவத்தினரை அனுப்பி விட்டால் பிரச்சினை தீர்ந்தது என்று அரசுத் தலைமை எண்ணுகின்றது போலும்.

போதாக்குறைக்கு மாவட்ட, பிரதேச செயலக நிர்வாகங்களும் தத்தமது பாட்டில் திடீர் திடீரென முடிவுகளை எடுத்து, அறிவித்து பண்ணும் குளறுபடி அனர்த்தம் அதிகம்.

ஒருபுறம் அரசு ஊழியர்கள், மறுபுறம் சுகாதாரத் துறையினர், இன்னொருபுறம் அரசபடையினர், பொலிஸார் என்று பிய்த்தெடுக்க, இழுத்த பக்கமெல்லாம் இழுபடுகின்றன மாவட்ட நிர்வாகங்கள். இதற்குள் கடற்றொழிலாளர்கள், விவசாயிகள் தரப்புகள் என்று இன்னும் சில குழுமங்கள்.

உணவு விநியோகம், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் என்று பிறிதொரு பிரிவினரின் வற்புறுத்தல்கள்.

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில் மறக்கப்பட்டு விட்ட அப்பாவிப் பொதுமக்கள்.

மக்கள் தனித்தனியாக நல்லவர்கள். ஆனால் கும்பலாகச் சேரும்போது கும்பல் மனோபாவம் (Mob Mentality) வந்துவிடுகின்றது. அது ஆபத்தானது.

அதுவும் மணிக்கணக்கில், நாள் கணக்கில் வெயில், மழை பாராது காத்து நிற்கும் மக்கள் கூட்டத்தின் கும்பல் மனோபாவம் விரைந்து விபரீதமாக மாறக்கூடியது.

எரிபொருள் நிலையங்களில் மோதல்கள் தொடங்கி விட்டன. நிலைமை கட்டு மீறி வருகின்றது. காயங்கள் உயிரிழப்புகளாக மாறும் ஆபத்துகளும் தென்படுகின்றன.

எரிபொருள் நிலையங்களில் இருந்து வரிசையில் இரண்டு பக்கத்திலும் கிலோ மீற்றர் கணக்குக்கு வாகனங்கள் அசையாமல் நாள்கணக்கில் காத்து, தரித்துநிற்கின்றன. எரிபொருளை விநியோகித்தால்தான் அவற்றை அங்கிருந்து நகர்த்த முடியும். அப்படி நகர்த்தினாலும் அந்த இடத்துக்குப் புதிய வரிசை விரைந்து வந்து விடும்.

இப்படி நீண்ட தூரத்திற்கு தங்கள் வாசல் பகுதியை மறைத்து நிரந்தரமாகத் தரித்துக் காவல் நிற்கும் வாகனங்களினால் தங்களின் தினசரி வர்த்தகம் படுத்துவிட்டது என வர்த்தக நிறுவன உரிமையாளர்கள் குழம்புகிறார்கள். இந்த வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு அவர்கள் கூட விபரீதமான வழிமுறைகளை நாடக் கூடிய ஆபத்து ஏது நிலைகள் உண்டு.

எரிபொருள் பற்றாக்குறை என்பது வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் பெரிதும் பாதிப்பை – தாக்கத்தை – ஏற்படுத்தக்கூடியது.

இப்போது எரிபொருள் – மண்ணெண்ணெய் தவிர மற்றவை எல்லாம் – மானிய அடிப்படைக்கு வழங்கப்படுவதில்லை. உலக சந்தையில் மசகு எண்ணெய் வாங்கிய விலையில் இருந்து, அதைத் தருவித்து, சுத்திகரித்து, எரிபொருள் நிலையங்களுக்கு எடுத்து வந்து, விநியோகிப்பதற்கான முழுக் கட்டணங்களையும் பொதுமக்களிடம் இருந்து அறவிட்டே அதனை மக்களுக்கு அரசு விற்பனை செய்கின்றது. அப்படி இருந்தும் கூட எரிபொருள் தேவையின் கணிசமான அளவைக் கூட வழங்க முடியாத – இயலுமையற்ற – அரசாகத்தான் ‘கோட்டை விட்ட’ கோட்ட அரசு உள்ளது. அது நாட்டின் தலைவிதி.

# ஒரே நாளில் மூன்று சட்டங்கள் அமுல்!

நாடாளுமன்றத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்ட கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம், குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் மற்றும் குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலம் ஆகியவற்றில் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தனது கையொப்பத்தையிட்டு கடந்த வியாழக்கிழமை சான்றுரைப் படுத்தினார்.

கைத்தொழிற் பிணக்குகள் தீர்ப்பதில் நீதிவான் நீதிமன்றங்களில் காணப்படும் நெரிசலைக் குறைப்பதற்கு தொழில் நியாய சபைகளின் தலைவர்களை மேலதிக நீதிவான்களாக கருதுவதற்கும் அதனுடன் தொடர்புபட்ட விடயங்களுக்கு ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கும் கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலத்தால் எதிர்பார்க்கப்படுகின்றது.

குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தால் 1979 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்தில் 442 ஆம் பிரிவு திருத்தப்படுவதுடன் வழக்கு ஒன்றின் ஒவ்வோர் தரப்பினருக்கும் தீர்ப்பின் அல்லது வழக்கு அறிக்கையின் கட்டளையின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதியொன்றை கட்டணமின்றி வழங்குதல் இடம்பெறுகின்றது.

குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டமூலத்தால் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை சட்டத்துக்கு 154 (அ) எனும் புதிய பிரிவு உட்புகுத்தப்படுவதுடன் எவையேனும் வழக்கு நடவடிக்கைகளில் விதிமுறைப்பட்ட எண்பிப்பிலிருந்து குறித்த சில ஆவணங்களை விலக்களிப்பதும் இடம்பெறுகின்றது.

அதற்கமைய, இந்த சட்டமூலங்கள் 2022 ஆம் ஆண்டு 17 ஆம் இலக்க குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம், 2022 ஆம் ஆண்டு 18 ஆம் இலக்க குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க கைத்தொழிற் பிணக்குகள் (விசேட ஏற்பாடுகள்) சட்டமாக வியாழக்கிழமை முதல் நடைமுறைக்கு வருகின்றன.

## சட்டவிரோதமாக இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட 5 சொகுசு வாகனங்கள் மீட்பு!

சட்டவிரோதமான முறையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட ஐந்து சொகுசு வாகனங்களை சுங்க திணைக்களம் கைப்பற்றியுள்ளது. கைப்பற்றப்பட்ட வாகனங்களில் பி.எம்.டபிள்யூ., மெர்சிடெஸ் மற்றும் ஆடி கார்கள் உள்ளடங்குகின்றன என சுங்கத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய இராச்சியத்தில் இருந்து உதிரி பாகங்கள் என்ற போர்வையில் இந்த வாகனங்கள் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன என அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஒருகொடவத்தையில் அமைந்துள்ள களஞ்சியசாலையில் இருந்து இந்த வாகனங்கள் கைப்பற்றப்பட்டன என சுங்க அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.

இதற்கிடையில், சுங்க அதிகாரிகள் ஒரு கோடி ரூபாவுக்கு மேல் மதிப்புள்ள தடை செய்யப்பட்ட பொருள்களையும் பறிமுதல் செய்தனர்.

அவற்றுள், 40 ஆயிரம் அமெரிக்க டொலர் மதிப்புள்ள 25 ஆயிரம் விஸ்கி பாட்டில்கள், என்ஜின் ஒயில், அழகு சாதனப் பொருள்கள், மஞ்சள் மற்றும் லைட்டர்கள் ஆகியவை அடங்கும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

வத்தளை சரக்கு அகற்றும் நிலையத்தில் இரண்டு கொள்கலன்களில் இருந்து இந்தப் பொருள்கள் சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

## எரிபொருளுக்கு வரிசையில் நின்ற இளைஞன் லொறி மோதி சாவு!

அநுராதபுரம் – பந்துலகம எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு அருகில் வரிசையில் காத்திருந்த இளைஞர் ஒருவர் இன்று (வெள்ளிக்கிழமை) காலை இடம்பெற்ற வாகன விபத்தில் உயிரிழந்துள்ளார்.

கனரக உபகரணங்களை ஏற்றிச் சென்ற லொறி மோதியதில் குறித்த இளைஞர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவர் தம்புத்தேகம பகுதியைச் சேர்ந்த 19 வயதுடையவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

அனுராதபுரம் – புத்தளம் வீதியின் இடது புறத்தில் எரிபொருளுக்காக வரிசையில் காத்திருந்த நிலையிலேயே இளைஞன் உயிரிழந்தார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேநேரம், கடந்த வியாழக்கிழமை களுத்துறை, மத்துகமவில் பெற்றோலுக்காகக் காத்திருந்த 55 வயதுடைய குடும்பஸ்தர் ஒருவரும் லொறி மோதியதில் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள் பதுக்கி வைத்த மூவர் மாத்தறையில் கைது!

சட்டவிரோதமான முறையில் எரிபொருளை சேமித்து வைத்திருந்த மூவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.



சந்தேகநபர்கள் மாகும்புர, மாத்தறை மற்றும் பூகொட ஆகிய பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மாகும்புர பகுதியைச் சேர்ந்தவரிடமிருந்து 1,350 லீற்றர் டீசலை பொலிஸார் கண்டுபிடித்துள்ளனர்.

சந்தேகநபர் நேற்று ஹோமாகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

மாத்தறையில் கைது செய்யப்பட்ட நபரிடம் 800 லீற்றர் டீசல் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சந்தேக நபர் நேற்று மாத்தறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதேவேளை, பூகொட பிரதேசத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து 32 லீற்றர் டீசல் மற்றும் தடை செய்யப்பட்ட கத்தி ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 45 வயதுடையவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பூகொட பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# உணவுத் தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவைச் சந்திக்கும் உலக நாடுகளுக்கு ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை




உணவுத் தட்டுப்பாட்டால் உலகம் பேரழிவை சந்திக்கும் என்றும் அதன் பின் விளைவுகளில் இருந்து எந்த நாடும் தப்ப முடியாது என்றும் ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் பேசிய ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் பருவ நிலை மாற்றம், கொரோனா பெருந்தொற்று, ஆகியவற்றால் முன் நாள்களில் இல்லாத அளவுக்கு சர்வதேச அளவில் உணவு பற்றாக்குறை அதிகரித்துள்ளதாக கூறினார்.

இதனால் கோடிக்கணக்கானோர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் உக்ரைன் மீதான ரஷ்ய போரால் நிலைமை மோசமடைந்துள்ளதாக குட்டரெஸ் கூறினார். இன்னும் ஓரிரு நாள்களில் உணவு பற்றாக்குறையால் பல்வேறு நாடுகள் பெரும் பாதிப்பை சந்திக்கும் என்றும் எச்சரித்துள்ளார். ஓரிரு ஆண்டுகளில் உணவு பற்றாக்குறை ஏற்படும் என்று கூறியுள்ள குட்டரெஸ், ஆசியா, ஆபிரிக்கா, அமெரிக்காவில் வேளாண் பணிகளுக்கு தேவையான உரம், எரிபொருள் ஆகியவற்றின் விலை உயர்வை சமாளிக்கமுடியாமல்விவசாயிகள்திணறிவருகின்றனர் என கூறியுள்ளார்.

2023ம் ஆண்டில் உணவு பஞ்சம் தீவிரமடையும் என்றும் உணவு பொருள்களுக்கு சர்வதேச அளவில் தட்டுப்பாடு ஏற்படும் என்றும் அவர் எச்சரித்துள்ளார். உணவு பொருள் தட்டுப்பாட்டை சமாளிக்க ஐ.நா. அமைப்பின் அதிகாரிகள் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக குட்டரெஸ் தெரிவித்துள்ளார். வேளாண் பணிகளை தீவிரப்படுத்தும் நடவடிக்கையாக விவசாயிகளின் நிதி ஆதாரத்தை பெருக்கும் நடவடிக்கையில் உலக நாடுகள் தீவிரம் காட்ட வேண்டும் என்றும், உணவு சந்தையை பலப்படுத்த தனியார் துறையினரும் உதவி செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

## கருக்கலைப்பு உரிமை சட்டம் ரத்தானது அமெரிக்க நாட்டில்



அமெரிக்காவில் 50 ஆண்டுகால கருக்கலைப்பு உரிமை சட்டத்தை அந்நாட்டு உச்சநீதிமன்றம் ரத்து செய்துள்ளது. உச்சநீதிமன்ற தீர்ப்பை தொடர்ந்து அமெரிக்காவில் 13 மாகாணங்கள் கருக்கலைப்பு தடை சட்டத்தை இயற்றியுள்ளன. கருக்கலைப்பு பெண்ணின் தனிப்பட்ட உரிமை என்று 1973ம் ஆண்டு அமெரிக்க உச்சநீதிமன்றம் தீர்ப்பு அளித்தது. கருக்கலைப்பு உரிமை சட்டம் ரத்து செய்யப்பட்டது அமெரிக்காவுக்கு மோசமான நாள் என அதிபர் ஜோ பைடன் கருத்து தெரிவித்துள்ளார்.

கருக்கலைப்பு உரிமை சட்டத்தை ரத்து செய்ததன் மூலம் பெண்களின் அடிப்படை உரிமையை உச்சநீதிமன்றம் பறிக்கிறது. பெண்களின் அடிப்படை உரிமையை பறித்து அமெரிக்க உச்சநீதிமன்றம் வரலாற்று பிழையை இழைத்து விட்டது. உச்சநீதிமன்ற தீர்ப்புக்கு எதிராக போராடுபவர்கள் வன்முறையில் ஈடுபடக்கூடாது எனவும் அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.



## ரஷ்யாவின் சரக்கு விமானம் விபத்து; 4 பேர் உயிரிழப்பு

ரஷ்யா ராணுவத்தின் சரக்கு விமானம் விபத்துக்குள்ளானதில் 4 பேர் உயிரிழந்தனர். ரஷ்ய ராணுவத்துக்குச் சொந்தமான ஹெவிலிப்ட்-76 சரக்கு விமானம் நேற்று புறப்பட்டு சென்றது. ரியாசன் நகருக்கு வெளியே வயல்வெளியில் விமானம் விழுந்து விபத்துக்குள்ளானது. இந்த விமானத்தில் இருந்த 4 பேர் உயிரிழந்தனர். மேலும் 5 பேர் காயமடைந்துள்ளனர். விமானத்தில் இன்ஜின் கோளாறு ஏற்பட்டதால் விமானம் விழுந்து நொறுங்கியதாக தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்தவர்கள் மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். ஹெவிலிப்ட் -76 விமானம் கடந்த 1970ம் ஆண்டு வடிவமைக்கப்பட்டது. சோவியத் மற்றும் ரஷ்யாவின் விமானப்படையில் முக்கிய பங்காற்றியுள்ளது. உலகம் முழுவதும் பல நாடுகள் இந்த சரக்கு விமானத்தை பயன்படுத்தி வருகின்றன.

## குரங்கு அம்மை நோய் பரவல் 58 நாடுகளில் தாக்கம்

### அவசர நிலையை அறிவித்தது உலக சுகாதார அமைப்பு




குரங்கு அம்மை நோய் பரவல் எதிரொலியாக அவசர நிலையை உலக சுகாதார நிறுவனஅமைப்புஅறிவித்துள்ளது. உலகம் முழுவதும் குரங்கு அம்மையால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்து கொண்டே செல்கிறது. இதுவரை 58 நாடுகளில் இந்த நோய் தாக்கியுள்ளது. உலகளவில், 3,417க்கும் மேற்பட்டோர் குரங்கு அம்மை பாதிப்பிற்கு உள்ளாகியுள்ளனர்.


இந்நிலையில், குரங்கு அம்மை நோய் தொற்று பரவல் தொடர்பாக அவசர கூட்டத்தை நடத்த உள்ளதாக உலக சுகாதார நிறுவனம் அறிவித்திருந்தது. குரங்கு அம்மை நோய் தொற்றானது, சர்வதேச அளவில், கொரோனா போன்று பொது சுகாதார அவசரநிலை பிரகடனப்படுத்தப்பட வேண்டுமா என்பதை ஆராய்ந்து முடிவெடுக்க இந்த கூட்டம் நடக்கிறது. இது தொடர்பாக, உலக சுகாதார அமைப்பின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் நிருபர்களிடம் கூறுகையில், குரங்கு அம்மை நோய் பரவுவது அசாதாரணமானது மற்றும் கவலைக்குரியது என தெரிவித்தார்.

இதுகுறித்து உலக சுகாதார அமைப்பு வெளியிட்டுள்ள செய்தியில் கூறியிருப்பதாவது: குரங்கு அம்மை நோய் பாதிப்பை சர்வதேச அளவில் பொது சுகாதார அவசர நிலையாக உலக சுகாதார அமைப்பு அறிவிக்கிறது. இந்த தொற்றுநோய் குறிப்பிட்ட ஒரு நாடு அல்லது பிராந்தியத்திற்கு மட்டும் பரவக் கூடியதல்ல என்பது தெளிவாகிறது. சமூக பரவல் எங்கு நடந்தாலும் உடனடி நடவடிக்கைகளால் கவனிக்கப்பட வேண்டும்.

இந்த நோயால் சிறிய பாதிப்பு ஏற்படுவதை உலகம் உறுதி செய்வதற்காகவே அறிவிக்கப்பட்டுள்ளது. கடுமையான வலி, பயம், கண் பார்வை இழப்பு மற்றும் உயிரிழப்பு ஆகிய பாதிப்புகள் குரங்கு காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர்களில் காணப்படுகின்றன. தற்போதைய சூழலில் சமூக பரவலாக நோய் தொற்றின் வேகம் விரிவடைவதால் இதுவரை காப்பாற்றப்பட்ட குழந்தைகளுக்கு கூட தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. வளர்ப்பு பிராணிகள் உள்பட வனவிலங்குகளுக்கு பரவும் ஆபத்தும் உள்ளது. இது உலகம் முழுவதும் விரிவடையும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

## நோர்வே நாட்டில் துப்பாக்கிச் சூடு

*நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் நடந்த துப்பாக்கிச் சூட்டில் 2 பேர் உயிரிழந்தனர். மேலும் 10க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர்.*





## உக்ரைனுக்கு அமெரிக்கா ரூ.3,500 கோடி ராணுவ உதவி

*உக்ரைனுக்கு 450 மில்லியன் டொலர் (சுமார் ரூ.3,500 கோடி) மதிப்பிலான ராணுவ உதவிகளை அமெரிக்கா வழங்குகிறது.*

*பீரங்கி ரொக்கெட் அமைப்புகள், கவச வாகனங்கள், 1,200 கையெறி கண்டு லாஞ்சர்கள், 2,000 இயந்திர துப்பாக்கிகள் வழங்குகின்றன.*

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# மோடிக்கு எதிரான குஜராத் கலவரம் தொடர்பான மனு தள்ளுபடி செய்து உத்தரவு பிறப்பித்தது உச்ச நீதிமன்றம்



குஜராத்தில் கடந்த 2002 ஆம் ஆண்டு கோத்ரா பகுதியில் நடைபெற்ற ரயில் எரிப்பு சம்பவத்தில் 58 கரசேவகர்கள் உயிரிழந்தனர். இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து குஜராத் முழுவதும் இஸ்லாமியர்களுக்கு எதிராக பயங்கரமான கலவரம் வெடித்தது. இதில் ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

அந்தச் சமயத்தில், குஜராத் முதல்வராக நரேந்திர மோடி பதவி வகித்தார். இந்தக் கலவரம் தொடர்பாக நரேந்திர மோடி உட்பட அறுபதுக்கும் மேற்பட்டோர் மீது புகார் அளிக்கப்பட்டது. இது குறித்து விசாரணை நடத்திய பொலிஸார், மோடி உட்பட புகார் அளிக்கப்பட்ட யாருக்கும் கலவரத்தில் தொடர்பில்லை எனக்கூறி வழக்கை முடித்து வைத்தனர்.

இதனிடையே, இந்த வழக்கை குஜராத் பொலிஸார் விசாரித்தால் நியாயம் கிடைக்காது எனவும், உரிய வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் எனவும் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யப்பட்டது. கலவரத்தில் உயிரிழந்த காங்கிரஸ் எம்.பியான எசான் சாப்ரியின் மனைவி ஜாகியா சாப்ரி இந்த மனுவைத் தாக்கல் செய்திருந்தார்.

குறித்த மனுவைப் பரிசீலித்த நீதிபதிகள், குஜராத் கலவரம் குறித்து விசாரிக்க உச்ச நீதிமன்றத்தின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சிறப்புப் புலனாய்வுக் குழு ஒன்றை 2009 ஆம் ஆண்டு அமைத்தனர். சுமார் 3 ஆண்டுக்கால விசாரணைக்கு பின்னர் 2012 இல் தனது அறிக்கையை உச்ச நீதிமன்றத்தில் அந்த சிறப்புக் குழு தாக்கல் செய்தது. அதில், குஜராத் கலவரத்துக்கும் மோடிக்கும் தொடர்பு இல்லை, எனத் தெரிவித்திருந்தது. இதனை உச்ச நீதிமன்றமும் ஏற்றுக்கொண்டது.

அதனையடுத்து, அந்த சிறப்புக் குழுவின் விசாரணை அறிக்கைக்கு எதிராக, ஜாகியா சாப்ரி உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார். இந்த மனு மீதான வாத, பிரதிவாதங்கள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முடிவடைந்ததை அடுத்து ஜூன் 24 ஆம் திகதிக்கு வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் ஒத்தி வைத்திருந்தனர். அதன்படி, சிறப்பு விசாரணைக் குழுவின் அறிக்கைக்கு எதிராக மனுதாரர் தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இல்லை எனக் கூறி அந்த மனுவை நேற்று நீதிபதிகள் தள்ளுபடி செய்து உத்தரவிட்டுள்ளனர்.

## பிரதமரும் முதல்வர்களும் சூழ்ந்திருக்க திரௌபதி முர்மு வேட்புமனுத் தாக்கல்



இந்திய ஜனாதிபதித் தேர்தலில் தேசிய ஜனநாய கூட்டணியின் வேட்பாளர் திரௌபதி முர்மு, நேற்று பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்டோரின் ஆதரவுடன் தனது வேட்புமனுவைத் தாக்கல் செய்தார். தேர்தல் அதிகாரியான மாநிலங்களவை செயலர் ப்ரமோத் சந்திரா மோடியிடம் திரௌபதி முர்மு தனது வேட்புமனுவை அளித்தபோது பாரதிய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த பல மாநில முதல்வர்களும் மத்திய அமைச்சர்களும் உடனிருந்தனர்.

திரௌபதி முர்முவின் வேட்புமனுத் தாக்கல் நிகழ்ச்சியில் அ.தி.மு.க. சார்பாக முன்னாள் தமிழக முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், முன்னாள் துணைச் சபாநாயகர் தம்பிதுரை மற்றும் மக்களவை உறுப்பினர் ஓ.பி.ரவீந்திரநாத் ஆகியோரும் பங்கேற்றனர். தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் ஏற்கெனவே தனது ஆதரவை திரௌபதி முர்முவுக்குத் தெரிவித்துள்ளார்.

பாரதிய ஜனதா கட்சித் தலைமைக்கு, அ.தி.மு.கவின் ஆதரவை எடப்பாடி பழனிச்சாமி தெரிவித்துள்ளார் எனவும் செய்திகள் கூறுகின்றன. சி.டி. ரவி உள்ளிட்ட பா.ஜ.க. தலைவர்கள் திரௌபதி முர்முவுக்கு ஆதரவு கோரி சென்னையில் அ.தி.மு.க. தலைவர்களை சந்தித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. திரௌபதி முர்முவின் வேட்புமனுவை முன்மொழிந்தோர், வழிமொழிந்தோர் பட்டியலில் அ.தி.மு.க. இடம்பெற்றுள்ளதாகவும் அ.தி.மு.க. வட்டாரங்கள் குறிப்பிட்டுள்ளன.

## ஆளுமைகள் மறைவால் தமிழக அரசியலில் வெற்றிடம் பா.ஜ.கவின் மாநிலத் தலைவர் அண்ணாமலை கருத்து

கோவையில் நடைபெற்ற பா.ஜ.க. மகளிரணி மாநில நிர்வாகிகள் அறிமுகக் கூட்டத்தில் அக்கட்சியின் மாநிலத் தலைவர் அண்ணாமலை சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையின்போது பா.ஜ.க. தேசிய மகளிரணித் தலைவர் வானதி சீனிவாசன், மகளிரணியில் புதுமையான விடயங்களை கொண்டு வந்துள்ளார். அதனை ஏற்றுக் கொள்ளும் பக்குவம் தமிழக மக்களுக்கு உள்ளது. இந்தியாவில் தமிழக மகளிரணி முதலிடத்திற்கு வர வேண்டும். அது தான் வானதி சீனிவாசனுக்கு பெருமை சேர்க்கும். அடுத்த 3 ஆண்டுகளில் மிகப்பெரிய சரித்திர மாற்றத்தை இந்த அணி ஏற்படுத்தும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை, என்று தெரிவித்திருக்கிறார்.

தமிழக அரசியலில் வெற்றிடம் உள்ளது. தமிழகத்தில் ஆளுமைகள் மறைந்த பிறகு அரசியலில் மகளிருக்கு வெற்றிடம் அதிகமாகவே உள்ளது. சுத்தமான அரசியலை மகளிர் விரும்புகிறார்கள்.

மகளிர்தான் தீர்மானிக்கும் சக்தியாக உள்ளனர். மத்திய அரசின் 90 சதவீத திட்டங்கள் மகளிர் நலனுக்காகத்தான் கொண்டு வரப்படுகின்றன. அரசின் திட்ட வடிவமைப்புகள் மகளிரை மையமாக வைத்துத்தான் உள்ளன. மகளிர்கள் வாக்குச் சாவடியில் பா.ஜ.கவிற்கு மிகப்பெரிய நம்பிக்கையாக உள்ளனர். மகளிரிடம் நம்பிக்கை இருக்கும் வரை மோடியை அசைக்க முடியாது, எனவும் அவர் தனது உரையில் குறிப்பிட்டிருக்கிறார்.

## தமிழக ஆளுநர் ரவி ராமேஸ்வரத்துக்கு விஜயம்



உலகப் பிரசித்தி பெற்ற ராமேஸ் வரம் ராமநாத சுவாமி திருக் கோவிலுக்கு சுவாமி தரிசனம் செய்வதற்காக தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று தனது குடும்பத்தாருடன் சென்றுள்ளார். அவரை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் ஜானி டொம் வர்கிஸ், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தங்கதுரை உள்ளிட்டோர் நேரில் சந்தித்து பூங்கொத்து கொடுத்து வரவேற்றனர்.

இன்று அதிகாலை ராமநாத சுவாமி சன்னதியில் ஸ்படிக லிங்க தரிசனம், பொது தரிசனத்தில் தனது குடும்பத் தாருடன் கலந்து கொண்ட தமிழக ஆளுநர் சாமி தரிசனம் செய்தார். அப்போது கோவில் நிர்வாகம் சார்பில் ஆளுநருக்கு பூரண கும்ப மரியாதை வழங்கப்பட்டது. தமிழக ஆளுநரின் வருகையையொட்டி ராமேஸ்வரம் ராமநாதசுவாமி கோயிலின் நான்கு ரத வீதிகளிலும் பொலிஸார் பாதுகாப்புப்பணியில்ஈடுபட்டிருந்தனர்.

சாமி தரிசனத்தை நிறைவு செய்த ஆளுநர், தனுஷ்கோடி பகுதிக்கும் தனது குடும்பத்தாருடன் சென்று சுற்றுலாத் தலங்களைப் பார்வையிட்டார்.

# எதிர்க்கட்சிகளின் ஜனாதிபதி வேட்பாளர் யஸ்வந்த் சின்ஹா திங்களன்று வேட்புமனு தாக்கல் செய்யவுள்ளாராம்

எதிர்க்கட்சிகளின் சார்பில் இந்திய ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளரான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியின் யஸ்வந்த் சின்ஹா, தனது வேட்புமனுவை திங்கட்கிழமை தாக்கல் செய்வார் என எதிர்க்கட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கிரஸ், தி.மு.க., இடதுசாரிக் காட்சிகள், திரிணாமூல் காங்கிரஸ், சமாஜவாதிக் கட்சி, சிவசேனா, தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் ஆதரவு அளிப்பதாக தெரிவித்திருந்தாலும், பா.ஜ.க. கூட்டணிக்கே பெரும்பான்மையான ஆதரவு இருப்பதனால், சின்ஹா வெற்றி பெற வாய்ப்பில்லை எனவே அரசியல் அவதானிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளருக்கு பிஜு ஜனதாதளமும் வை.எஸ்.ஆர். காங்கிரஸ் கட்சியும் ஆதரவு அளிப்பதால், தங்களது வேட்பாளரான திரௌபதி முர்முவுக்கு வெற்றி உறுதி என என பா.ஜ.க. தலைவர்கள் கருத்து வெளியிட்டுவருகின்றனர். இது வரை எந்தத் தரப்புக்கும் ஆதரவை வெளியிடாத ஆம் ஆத்மி கட்சியின் தலைவரான அரவிந்த் கெஜ்ரிவால், ஜனாதிபதித் தேர்தல் குறித்த தமது கட்சியினை விரைவில் அறிவிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.







# மட்டக்களப்பு முகத்துவாரம் வெட்டப்படுவதனால் ஐயாயிரம் ஏக்கர் நெல் வயல் காப்பாற்றப்படுகிறது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மட்டக்களப்பு மாவட்டத்தின் சில பகுதிகளில் ஆற்று வெள்ளப் பெருக்கினால் வயற்காணிகளில் மேலதிகமான வெள்ளம் தேங்கியுள்ளது. இந்த மேலதிக நீரை வெளியேற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அண்மையில் மட்டக்களப்பு மாவட்ட செயலக அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தனின் தலைமையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலில் இது குறித்து ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆற்றுவெள்ளம் பெருக்கெடுத்துள்ளதனால் ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளமையுடன் ஆற்றுவெள்ளத்தை அகற்றாவிடின் விவசாயிகள் பாரிய நட்டத்தினை எதிர்நோக்கவேண்டிய நிலையில் உள்ளனர் என மாவட்ட விவசாயிகள் மாவட்ட அபிவிருத்திக்குழுவின் இணைத் தலைவர் சி.சந்திரகாந்தனின் கவனத்திற்கு கொண்டுவந்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பில் ஆராய்ந்து உரிய நடவடிக்கைகளை எடுக்கும்படி சிவநேசதுரை சந்திரகாந்தன் அதிகாரிகளுக்கு அன்றையதினம் பணித்திருந்தார்.

இவ்விடயம் தொடர்பில் உரிய அதிகாரிகள் கள விஜயங்களை மேற்கொண்டு இவ்விடயம் தொடர்பில் துரித நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றனர்.

நேற்றைய தினம் மட்டக்களப்பு முகத்துவாரப்பகுதிக்குச் சென்று, முகத்துவாரத்தை வெட்டி வயற்காணிகளில் மேலதிகமாக தேங்கியுள்ள நீரை வெளியேற்றுவதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

வயற்காணிகளில் மேலதிகமாகத் தேங்கியுள்ள நீரினை வெளியேற்றாவிட்டால் ஐயாயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நெல் வயல்களிலிருந்து அறுவடையைப் பெற முடியாமல் போவதுடன் தாம் பாரிய நட்டத்திற்கு முகங்கொடுக்க நேரிடும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.







# ஒருபால் திருமணத்தைக் கோரும் தமிழக, அக்கரைப்பற்று யுவதிகள்

## உளநல மருத்துவரிடம் அனுப்புகிறது நீதிமன்றம்

இந்தியாவிலிருந்து வந்த யுவதி ஒருவர், அக்கரைப்பற்றில் உள்ள யுவதி ஒருவரைத் தனக்குத் திருமணம் செய்து வைக்கும்படி கூறியமையையடுத்து, இரு பெண்களையும் உளநல மருத்துவரிடம் காண்பித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அக்கரைப்பற்று பெண்ணின் தந்தை பொலிஸில் செய்த முறைப்பாட்டையடுத்து, அக்கரைப்பற்று நீதிமன்றத்தினால் இரு பெண்களையும் இவ்வாறு உளநலமருத்துவரிடம் காண்பித்து அறிக்கையை சமர்ப்பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது:–

கடந்த திங்கட்கிழமை இந்தியாவிலிருந்து அக்கரைப்பற்றுக்கு தனது நண்பியைதேடி யுவதி ஒருவர் வந்துள்ளார். தாங்கள் இருவரும் நண்பிகளாக தொலைபேசி மூலம் உரையாடி வந்தனர் எனவும், தற்போது திருமணம் செய்வதற்கு விருப்பம் தெரிவித்துள்ளனர் எனவும் அந்தப் பெண்கள் கூறியுள்ளனர்.

இதனைத்தொடர்ந்து, அக்கரைப்பற்று பெண்ணின் பெற்றோர் பொலிஸில் முறைப்பாடு செய்தமையையடுத்து, அக்கரைப்பற்று நீதிவான் நீதிமன்றத்தில் இரு பெண்களையும் புதன்கிழமை நீதிவான் எம்.எச்.எம்.ஹம்ஸா முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இந்தியாவில் திருமணம் செய்துள்ள நண்பி ஒருவர் மூலம் தொலைபேசியூடாக இந்தியப் பெண்ணின் தொடர்பு ஏற்பட்டதாகவும் அக்கரைப்பற்று பெண் கூறினார்.

'உனக்கு திருமணமாகி ஒன்றரை வயது மகளும் கணவரும் இருக்கின்றனர். இந்நிலையில் நீ ஏன் இந்தப் பெண்ணை திருமணம் முடிக்கவேண்டும்?' என அக்கரைப்பற்று பெண்ணின்தந்தைதனதுமகளிடம்கேட்டுள்ளார்.

'அந்தப் பெண்ணை திருமணம் முடிக்க விரும்புகிறேன். அவளுடன் வாழ ஆசைப்படுகிறேன். அவளை திருமணம் செய்து இந்தியாவுக்கு செல்ல விரும்புகிறேன்' என மகள் தன் தந்தையிடம் கூறியுள்ளார்.

தமிழ் நாட்டைச் சேர்ந்த பெண் தனது நண்பி மூலமாக அறிமுகமாகி தொலைபேசி, வாட்ஸ் ஆப் ஊடாகப் பேசி வந்தார் எனவும், இருவரும் திருமணம் செய்வதற்கு இணங்கிக் கொண்டனர் எனவும், அதன் பின் அவரை இந்தியாவுக்கு அழைத்தார் எனவும், இலங்கையில் தற்போது கடவுச்சீட்டு பெறமுடியாத நிலை இருப்பதால் இலங்கைக்குவருமாறுஅவர்அந்தப்பெண்ணை அழைத்தார் எனவும் கூறியுள்ளார்.

இருவரது விளக்கங்களையும் கேட்ட நீதிபதி இருவரும் திருமணம் செய்யக் கோரியமையால், இருவரையும் கல்முனை வடக்கு வைத்திய சாலையின் உளநல மருத்துவ நிபுணரிடம் காண்பித்து அதன் அறிக்கையை எதிர்வரும் 27ஆம் திகதி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டார்.

# கருவேப்பங்கேணி வட்டாரத்தில் பொதுச்சந்தைக் கட்டடம் திறப்பு

(க.கிருபாகரன்)

கருவேப்பங்கேணி வட்டாரத்தின் மாநகரசபை உறுப்பினர் காலஞ்சென்ற வே.தவராஜாவின் முன்மொழிவுக்கமைவாக மட்டக்களப்பு மாநகரசபையினால் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கருவேப்பங்கேணி பொதுச்சந்தைக் கட்டடத் தொகுதி நேற்று பொதுமக்கள் பாவனைக்காகத் திறந்து வைக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் நாகராஜா மதிவண்ணன் தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழா நிகழ்வில், மட்டக்களப்பு மாநகரசபை முதல்வர் தியாகராஜா சரவணபவன் பிரதம அதிதியாகவும், கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் கா.சித்திரவேல் கௌரவ அதிதியாகவும், மாநகர பிரதி முதல்வர் தி.சத்தியசீலன் விசேட அதிதியாகவும் மற்றும் மாநகரசபை உறுப்பினர்கள், காலஞ்சென்ற மாநகரசபை உறுப்பினர்களின் குடும்பத்தினர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டக்களப்பு நகரை அண்டிய கருவேப்பங்கேணிப் பிரதேசத்தை வர்த்தக ரீதியாக முன்னேற்றும் நோக்கிலும், அப்பிரதேசம் சார்ந்த உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கான சந்தைப்படுத்தல் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையிலும் இந்த சந்தைத் தொகுதி நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இச்சந்தைக் கட்டடத் தொகுதியில் இறைச்சி விற்பனைக் கடைகள் மற்றும் மீன், மரக்கறி விற்பனைக் கடைகள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன.

இத்திறப்பு விழா நிகழ்வில், கருவேப்பங்கேணி கிராம அபிவிருத்திச் சங்கப் பிரதிநிதிகள், அப்பகுதி ஆலய நிர்வாகசபை உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# கடுமையான உழைப்பை வழங்கி நாட்டை வளப்படுத்திய தோட்டமக்கள் புறக்கணிப்பு!

## ஈரோஸ் அமைப்பு வேதனை



(க.கிருபாகரன்)

தங்களது கடுமையான உழைப்பின் மூலம் இந்நாட்டை தூக்கி நிறுத்திய மலையக மக்கள் சுமார் 200 வருடங்களாக அடக்குமுறைகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும், நவீன உழைப்புச் சுரண்டலுக்கும் உள்ளாக்கப்படுவதோடு அவர்களுக்கான வாழ்விடத்தை அமைத்துக்கொள்வதற்கும், வாழ்வாதாரத்தை மேற்கொள்வதற்குமான காணி உரிமையை இதுவரை வழங்கப்படாமைக்காக இந்தநாடு வெட்கப்படவேண்டும் என ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் பொதுச் செயலாளர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தெரிவித்தார்.

கடந்த திங்கட்கிழமை ஹற்றன் சாரதமஹால் வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தால் ஏற்பாடுசெய்யப்பட்டிருந்த 'காணி உரிமைக்கான தினத்தில்' கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் தெரிவித்தவை வருமாறு –

இந்த நாடு, நாட்டு மக்களுக்கு சொந்தமானதென்றால் இந்தநாட்டின் குடிமக்களான மலையக மக்களுக்கும் இந்த நாடு சொந்தமானதாகும். அந்த சொந்த நாட்டில் தான் சுதந்திரமடைந்த அடுத்த கணம் மலையக மக்கள் 'அந்நியராக்கப்பட்டனர்'. மீண்டும் இந்நாட்டின் குடிமக்களாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு சுமார் 7 தசாப்தங்கள் போராட வேண்டியதாயிற்று. ஆனால் இன்றும் எமது மலையக மக்கள் பேப்பர் பிரஜைகளாகவே (பதிவுபிரஜை) இருப்பது கவலைக்குரிய விடயமாகும்.

ஆகவே, எமது மக்களைப் பொதுபிரகடனத்தின் மூலம் வம்சாவளி பிரஜைகளாக ஏற்றுக் கொண்டும், எம்மக்களுக்கான காணி உரிமையை வழங்கியும் இந்த நாடு தனது நன்றியுணர்வை வெளிப்படுத்த வேண்டும்.

மலையக மக்கள் இந்த நாட்டைப் பிரித்துக் கேட்கவில்லை. இன்னொருவரின் காணியைக் கபடத்தனமாக கையகப்படுத்த முயற்சிக்கவில்லை. தங்களின் உழைப்பால் வந்த உடைமையை உரிமையாக்குமாறே கேட்கின்றனர். இந்த நாட்டில் வாழும் ஏனைய சமூகங்களுக்கு எந்த அடிப்படையில் காணிகள் பகிர்ந்தளிக்கப்படுகின்றனவோ அதேமுறைமையின் கீழ் மலை யக மக்களுக்கும் காணிகள் உரிமையாக்கப்படவேண்டும்.

மலையக பாட்டாளி வர்க்கம் உழைக்க மட்டும் பிறந்தவர்கள் அல்லர். அவர்கள் வாழவும் பிறந்தவர்கள். மந்தைக் கூட்டங்கள் அல்லர். போர்க்குணம்மிக்க பாட்டாளி வர்க்கத்தினர். அவர்களின் போராட்ட வலிமையை கடந்த காலத்தில் வரலாற்று நிகழ்வாக பதிவுசெய்துள்ளதை கடந்தகால மலையக மக்களின் போராட்ட நிகழ்வுகளை மீட்டிப் பார்த்தால், தெரிந்துகொள்ள முடியும்.

1936 ஆம் ஆண்டு உருளவள்ளி தோட்டத்தில்எழுச்சிபெற்றநிலவுடைமைக்கான போராட்டம் 1977 மே11டெவன்போராட்டத்தில் சிவனும் லெச்சுமணன் என்ற பாட்டாளி வளர்த்த இளைஞனை மண்ணுக்கு உரமாக்கி (பாதுகாப்புப்படையின் துப்பாக்கி சூட்டுக்கு பலி) பல்லாயிரக்கணக்கான தேயிலை விளைநிலங்களைப் பாதுகாத்த வீரமறவர்கள் வாழ்ந்த சமூகம் மலையக தமிழ் சமூகமாகும். பின் நாள்களில் இவர்களின் தலை வர்கள் என்று சொல்லிக் கொண்டவர்கள் தங்களுடைய சுகபோக வாழ்க்கைக்காக முதலாளித்துவ ஏகாதிபத்திய பேரினவாத அரசாங்கங்களோடு கைகோர்த்துக் கொண்டு மலையக பாட்டாளி வர்க்கத்தின் போர்க்குணங்களை மழுங்கடித்து, பிரித்தாளும் தந்தோரோபாயத்தை பயன்படுத்தி, அவர்களை சலுகைக்கு சோரம் போகும் சமூகமாக மாற்றி விட்டனர்.

இந்தநிலையில், 1980 களில் ஒடுக்குமுறைகளிலிருந்து மீண்டெழ வேண்டுமென்ற சிந்தனை கிளர்ச்சி மலையக படித்த இளைஞர்களிடையே ஏற்பட்டன. இந்த சிந்தனை கிளர்ச்சி மலையக மண்ணையும், மக்களையும் பாதுகாக்கும் இளைஞர்களின் எழுச்சியாக மாற்றம் பெற்றது. இந்த புதிய மாற்றத்தை மலையகத் தலைமைகளென்று சொல்லிக் கொண்டவர்கள் ஏற்றுக் கொள்ள மறுத்தார்கள்.

இளைஞர்களின் கோரிக்கைகளைப் புறக்கணித்தார்கள். அவர்களுக்கான வாய்ப்பை வழங்குவதற்கு மறுத்தார்கள். அதேநேரம் இன்னொரு பக்கம் வடக்கு கிழக்கில் தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டம் எழுச்சிபெற ஆரம்பித்திருந்தது. பல இயக்கங்கள் தோன்றின. அதில் பிரதான 05 இயக்கங்களில் ஒன்றான ஈரோஸ் அமைப்பு மலையகத்தை இணைத்துக்கொண்டுதனதுகொள்கைப் பிரகடனத்தை வெளியிட்டது. அதில் மலையக மக்களின் நிலவுடைமை மற்றும் பிரஜாவுரிமை பிரச்சினைக்கான தீர்வை பிரதான கோரிக்கையாக்கியிருந்தது. இது மலையக தலைமைகளால் புறக்கணிக்கப்பட்ட இளைஞர்களை ஈர்த்திருந்தது. நூற்றுக்கணக்கான மலையக இளைஞர்கள் ஈரோஸ் அமைப்போடு இணைத்து கொண்டு மலையக மக்களின் பிரச்சினைகளை தேசிய, சர்வதேச தளங்களில் பேசுபொருளாக்குவதற்கான பங்களிப்பை செய்திருந்தனர்.அந்தக் குரல் மலையக மக்களின் நிலவுடைமைக்காக இன்று வரை ஒலித்துக்கொண்டிருக்கின்றது.

அதே போல் காணி உரிமைக்கான போராட்டங்கள் பலதாசப்தங்களாக நடைபெற்று வருகின்றன. அதில் ஓர் அங்கமாக மலையக மக்களின் காணி உரிமைக்கான இயக்கத்தின் காத்திரமான பணியும் குறிப்பிட்டு சொல்லக் கூடிய தொன்றாகும்.

ஆகவே, 1980களின் பின் மலையகத்தில் ஏற்பட்ட மாற்றத்தில் எவ்வாறு அப்போதைய இளைஞர்கள் தங்களது உணர்வுபூர்வமான பங்களிப்பைச் செய்தார்களோ அதே போல் மலையக மக்கள் தங்களை நிலவுடைமை சமுதாயமாக நிலைநிறுத்திக் கொள்வதற்கான பயணத்துக்கு இன்றைய இளைஞர்களும் சட்டத்தரணிகளும் பல்கலைக்கழக மாணவர்களும் சமூக அரசியல் தொழிற்சங்க செயற்பாட்டாளர்களும் கைகோர்த்துக் கொண்டு உணர்வுபூர்வமாக பங்களிப்பை வழங்க முன்வரவேண்டும்.

மலையக மக்களின் அனைத்து போராட்டங்களிலும் அதை வலுப்படுத்துவதிலும், தீர்வுக்கான அழுத்தம் கொடுப்பதிலும் மலையக மக்களின் பிரச்சினைகளைத் தேசிய, சர்வதேச மட்டத்திற்கு கொண்டு செல்வதிலும் ஈரோஸ் அமைப்பும், ஈரோஸ் ஜனநாயக முன்னணியும் தனது முழுமையான பங்களிப்பை வழங்கும். – என்றார்.

# இளைஞர்களுக்கு உளச் சுகாதாரம் பற்றிய விழிப்பூட்டல் செயலமர்வு தம்பலகாமத்தில்





(ஹஸ்பர்)

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியை உள்ளடக்கிய இளைஞர்களுக்கு தற்போதைய நெருக்கடி நிலைவரத்தை எதிர்கொள்வது தொடர்பிலான விழிப்புணர்வு செயலமர்வு இடம்பெற்றது.

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜெ.ஸ்ரீபதியின் வழிகாட்டுதலுக்கிணங்க இந்த நிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில் உளச் சுகாதாரம் மற்றும் சமூக பொருளாதார நிலையில் எவ்வகையான சவால்களுக்கும் முகங்கொடுத்து அதிலிருந்து மீள்வதற்கான வழிகாட்டுதல்கள் ஆகியன குறித்துத் தெளிவுபடுத்தப்பட்டன. வளவாளர்களாக பிரதேச செயலக உளவளத்துணை உத்தியோகத்தர் கொன்சலின் மாவளன் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் றியால் சாலிகீன் போன்றோர்கள் கலந்து கொண்டனர். நிகழ்வில் பங்கேற்ற இளைஞர், யுவதிகளுக்குக் குழுப் பயிற்சிகளும் இதன் போது பகிர்ந்தளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# விவசாய அமைச்சின் கீழ் உள்ள ஊழியர்களது விடுமுறை இரத்து!

விவசாய அமைச்சின் கீழ் உள்ள அனைத்து ஊழியர்களினதும் விடுமுறைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, எதிர்வரும் ஜூலை மாதம் 06 ஆம் திகதி முதல் ஊழியர்களது விடுமுறைகள் இரத்துச் செய்யப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவிடம் இருந்து கிடைக்கப்பெறவுள்ள யூரியா உரத்தை வினைத்திறனான முறையில்விநியோகிப்பதற்காக இவ்வாறுவிடுமுறைகள் இரத்துச்செய்யப்பட்டுள்ளன என விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

# அரச ஊழியர்கள் தனியார் துறையில் பணியாற்ற 5 ஆண்டுகள் விடுமுறை

அரச ஊழியர்கள் தனியார் துறையில் பணியாற்றுவதற்கு 5 ஆண்டுகள் விடுமுறை வழங்குவதற்கான இயலுமை தொடர்பாக ஆராய 7 பேர் கொண்ட குழு நியமிக்கப்பட்டுள்ளது.

2 வாரங்களில் அமைச்சரவைக்கு இதுதொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம், இல-551A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.06.2022இல் வெளியிடப்பெற்றது.